# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2014 - 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 12

சுட்டெண்:............................................................................ நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. உயிர்யெழுத்துகள்

அ) 30 ஆ) 216 இ) 247 ஈ) 18

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. தென்னாடு பெற்ற செல்வத் தென்றலே என்ற பாடலைப் பாடியவர்

அ) கண்ணதாசன் ஆ) இளங்கோவடிகள்
இ) பாவேந்தர் ஈ) கம்பன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தமிழர் பண்பாடு என்பது

அ) பண்புத் தொகை ஆ) வேற்றுமைத் தொகை
இ) வினைத் தொகை ஈ) உவமைத் தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. உலக நாடுகள் தமிழீழ விடுதலைப்போராட்டத்தை நசுக்க விரும்பின. இச் செல்லியத்தில் இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்

அ) தமிழீழம் ஆ) உலகநாடுகள்
இ) விடுதலைப்போராட்டம் ஈ) விரும்பின

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. ஆரிய ஏமாற்றுக் கொள்கைகளை எதிர்த்துத் தன் மனத்தில் எழுந்த குமுறல்களைக் கவிதையாக்கியவர்

அ) பாவேந்தர் ஆ) திருவள்ளுவர்
இ) தாமரைக் கண்ணன் ஈ) அமுதன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. ஆரியர் மறைத்துவைத்த நூல்களில் ஒன்று

அ) மணிமேகலை ஆ) இராமாயணம்
இ) பாரதம் ஈ) பிரபந்தம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. சோழமன்னன் மீது பாடப்பட்டது

அ) தூதுப்பிரபந்தம் ஆ) பிள்ளைத்தமிழ்

இ) தலபுராணம் ஈ) கலிங்கத்துப் பரணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பின்வருவனவற்றுள் பயங்கரவாதம் என்ற பொருள் விளக்கும் சொல்

அ) நாள்கோள் ஆ) எடுகோள்

இ) கடற்கோள் ஈ) அரட்டுகோள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பெயர்சூட்டும் படி வலியுறுத்தும் கவிதையின் தலைப்பு

அ) எழுத்தாணிஏந்தும் ஈசர்கள் ஆ) நேரம் இதுதான்

இ) வெந்ததேசிந்தை ஈ) ஓடிடும் தமிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. பழங்கால வரலாற்றினைக் கூறுபவை

அ) தொன்மங்கள் ஆ) புரட்சிக் கவிதைகள்

இ) மரபுக் கவிதைகள் ஈ) புதுக் கவிதைகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. குமரிமுனை தொடக்கம் இமயம் வரை உள்ள பகுதியின் அன்றைய பெயர்

அ) கச்சதீவு ஆ) நெடுந்தீவு

இ) மாலைதீவு ஈ) நாவலந்தீவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. சுட்டெழுத்து அல்லாத எழுத்து

அ) உ ஆ) ப இ) அ ஈ) இ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. பதியெழு அறியாப் பழங்குடி

அ) ஆங்கிலேயர் ஆ) ஆரியர் இ) தமிழர் ஈ) சிங்களவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. வாசித்த அல்லது கண்டுணர்ந்த நிகழ்வு பற்றிய நன்று தீது ஆராய்ந்துரைக்கும் கட்டுரை

அ) திறனாய்வுக் கட்டுரை ஆ) வரலாற்றுக் கட்டுரை
இ) கற்பனைக் கட்டுரை ஈ) வண்ணனைக் கட்டுரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. வந்தான் என்ற வினைச்சொல்

அ) தன்மை ஆ) பன்மை இ) படர்க்கை ஈ) முன்னிலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. தமிழின் தன்னிகரற்ற நெஞ்சைஅள்ளும் காப்பியமாகக் கூறப்படுவது

அ) மணிமேகலை ஆ) குண்டலகேசி
இ) சீவகசிந்தாமணி ஈ) சிலப்பதிகாரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. அனைவரும் மாவீரர் நாளுக்குத் திரண்டுவருக! இச்சொல்லியம்

அ) ஏவல் ஆ) கூற்று இ) வியப்பு ஈ) வினா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. ய்,ர்,ல்,வ்,ழ்,ள் என்ற எழுத்துகள்

அ) உயிரினம் ஆ) வல்லினம்
இ) மெல்லினம் ஈ) இடையினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. பழந்தமிழரது இயற்கை வாழ்விலே உழைப் பொழிந்தகாலம்

அ) முதுவேனிற் காலம் ஆ) முன்பனிக் காலம்
இ) பின்பனிக் காலம் ஈ) இளவேனிற் காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. பின்வருவனவற்றில் பகாச் சொல்

அ) மாம்பழம் ஆ) தண்ணீர்

இ) நிலம் ஈ) உழவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. புலவன் தான் காணும் காட்சியைத் தன் கற்பனைத் திறனுடன் இணைத்துச் சொல்வது

அ) உவமைஅணி ஆ) தற்குறிப்பேற்ற அணி

இ) உருவகஅணி ஈ) உயர்வுநவிற்சி அணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. கற்றலும் கற்பித்தலும் முற்றுமுழுதாகப் பிராமணரிடம் சென்ற நூற்றாண்டு

அ) 10 ஆம் நூற்றாண்டு ஆ) 2 ஆம் நூற்றாண்டு

இ) 5 ஆம் நூற்றாண்டு ஈ) 9 ஆம் நூற்றாண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள்

அ) 20 ஆ) 12 இ) 100 ஈ) 216

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. முதல் எழுத்துகள் தொடர்ந்துவரும் சொல்லணி

அ) மோனை ஆ) எதுகை இ) உவமை ஈ) சிலேடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. கிண்கிணி களைந்தகால் ---- எனத் தொடங்கும் பாடலில் குறிப்பிடப்படும் வீரன்

அ) செங்குட்டுவன் ஆ) சோழன்

இ) நெடுஞ்செழியன் ஈ) அதியர் மான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. குறிஞ்சியும் முல்லையும் தம் இயல்பில் மாறிய பொழுது தோன்றிய நிலம்

அ) பாலை ஆ) முல்லை

இ) மருதம் ஈ) நெய்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. பெரும் பொழுதுகளில் ஒன்று

அ) யாமம் ஆ) காலை

இ) நண்பகல் ஈ) முதுவேனில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. பார்ப்பார் என்ற சொல் முன்னாளில் குறித்து நின்றது

அ) தேவரை ஆ) ஆரியரை

இ) அந்தணரை ஈ) பிராமணரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. ட் என்ற வல்லின மெய்யின் இன எழுத்து

அ) ங் ஆ) ஞ் இ) ம் ஈ)ண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. பன்னிரண்டாண்டுக்கு ஒருமுறை பூக்கும் பூவிற்குரிய நிலம்

அ) மருதம் ஆ) குறிஞ்சி

இ) முல்லை ஈ) நெய்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

உலகில் முதல் முதலில் மாந்தரால் பேசப்பட்ட மொழி தமிழே ஆகும். எமக்குத் தாய் மொழியாக விளங்குவது தமிழாகும். இது பழமைவாய்ந்த மொழியாகும். இன்று நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான நூல் தொல்காப்பியம். அது ஓர் இலக்கண நூல் இந் நூல் மூவாயிரம் ஆண்டுகளுக்குப் பழமை உடையது என அறிஞர்கள் கூறுகின்றனர். தொல்காப்பியத்தில் என்ப, என்மனார் புலவர் என்று நூற்பாக்களில் இடம் பெற்றுள்ளன. இச் சொற்களும் தொடர்களும் தொல்காப்பிய காலத்திற்கு முன்பே தமிழர் வாழ்ந்துள்ளனர் என்பதை விளக்குகின்றது. இலக்கியங்கள் படைக்கப்பட்டபிறகே இலக்கணம் வரையறைக்கப்படும் என்பது மரபு. அதனால் தமிழில் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கியங்கள் இருந்தன என்பது உறுதி செய்யப்படுகின்றது. பழந்தமிழர், அரசர்கள் ஆகியோர் தமிழைப் போற்றிவளர்த்தனர். தமிழ்ப் புலவர்களைப் பேணிக் காத்தனர். அத்துடன் கழகங்களை அமைத்தும் தமிழைக் காத்து வளர்த்தனர். தென் மதுரையில் திகழ்ந்த முதற் தமிழ்க் கழகமும் கபாடபுரத்தில் நிறுவப்பட்டிருந்த இரண்டாம் தமிழ்க் கழகமும் ஆழிப் பேரலையால் (கடற்கோளால்) அழிக்கப்பட்டன.இன்றுள்ள மதுரையில் மூன்றாம் தமிழ்க் கழகம் செயற்பட்டது. அக்கழகத்தில் பல புலவர்கள் இருந்து தமிழை வளர்த்தனர். எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்ற நூல்கள் இக்கழக காலத்திற்குரிய நூல்களாகும். மூன்றாம் தமிழ்க் கழகம் கடைக் கழகம் என அழைக்கப்பட்டது. அதனால் இக் கழக நூல்களும் கடைக் கழக நூல்கள் என அழைக்கப்படுகின்றன. இவற்றைத் தவிர ஐம்பெருங் காப்பியங்கள், ஐந்து சிறுகாப்பியங்கள் சமய இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பலவகை நூல்கள் தமிழில் காணப்படுகின்றன.

1. தமிழில் உள்ள மிகப்பழமையான இலக்கண நூல்கள் எது?

________________________________________

________________________________________

2. உலகில் முதன் மாந்தன் பேசிய மொழி எது?

________________________________________

________________________________________

3. யார் தமிழைப் போற்றி வளர்த்தனர்?

________________________________________

________________________________________

________________________________________

4. மூன்றாம் தமிழ்க் கழகம் எங்கிருந்து செயற்பட்டது?

________________________________________

________________________________________

________________________________________

5. கடைக்கழக நூல்கள் எவை?

________________________________________

________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. கருப்பொருள்,உரிப்பொருள் எனப் பழந்தமிழர் குறிப்பிடுவது எவற்றை?

2. கனகசுப்புரத்தினத்தின் கவிதைகள் எவற்றை எதிர்த்து எழுதப்பட்டன?

3. கல்வி பற்றி மனுநூல் கூறுவது யாது?

4. கடலாடுவிழாவாக இளவேனில் விழாவை நெடியோன் யாருக்காகத் தொடங்கினான்?

5. யாழ்ப்பாணஅரசில் ஆரியம் விரவியமைக்குச் சான்றுகாளக விளங்குவன யாவை?

6. பாடநூலில் உள்ள கவிதைகளில் உமக்குப் பிடித்த கவிதை எது? ஏன்?

7. பின்வரும் குறளின் பொருளைத் தருக.

   *மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்*
   *உயிர்நீப்பர் மானம் வரின்*

புள்ளிகள் 10

4) **கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

கார்த்திகை மாதம் என்றாலே கண்கள்  குளமாகுதே
கல்லறைகளை நோக்கிக் கால்கள் நடைபோடுதே

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. மெய்யெழுத்துகள் எத்தனை வகை?
   வல்லினமெய் யெழுத்துகளைத் தருக?

______________________________________________

______________________________________________

2. உவமைஅணி, உருவக அணி இவை இரண்டிற்கும் தனித் தனி எடுத்துக்காட்டுகள் தருக?

   உவமைஅணி :-

______________________________________________

______________________________________________

   உருவக அணி :-

______________________________________________

______________________________________________

3. இலக்கணவகையால் இடங்கள் எத்தனை வகைப்படும்?
   ஏதாவது இரண்டிற்கு எடுத்துக்காட்டுகள் தருக?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

4. பின்வருவனவற்றுக்கு எடுத்துக் காட்டுத் தருக.

வினைத் தொகை :-

---

பண்புத் தொகை :-

---

அன்மொழித்தொகை :-

---

5. வருகின்றான் என்ற வினைச் சொல்லின் திணை,காலம், இடம் என்பவற்றை எழுதுக.

திணை :-

---

காலம் :-

---

இடம் :-

---

புள்ளிகள் 15

## 6) பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

தமிழில் பல்வேறு இலக்கியங்கள் காணப்படுகின்றன. அவை நல்லறிவையும் ஒழுக்கத்தையும் கற்றுத் தருவனவாக அமைந்துள்ளன. ஆனால் கற்பனைக்கெட்டாத பொய்களையும் புழுகுகளையும் கொண்டெழுந்தவை இதிகாசங்கள். இதிகாசம் என்றால் இப்படி இருந்தது என்பது பொருளாகும். அந்த வகையில் பொய்களையும் புழுகுகளையும் அத்துடன் அறிவியலுக்கு ஒவ்வாத செய்திகளையும் உள்ளடக்கிய தாகக் கம்பராமாயணம் காணப்படுகின்றது. இராமாயணம் வான்மீகியால் வடமொழியில் எழுதப்பட்ட நூலாகும். வான்மீகி இராமாயணமே முதலில் எழுதப்பட்டது எனக் கூறுவர். அந்த வடமொழி இராமாயணத்தின் கதையில் இருந்து மாறுபட்ட வடிவத்தினையே கம்பர் கம்பராமாயணமாகக் காட்டுகிறார். இதில் இராவணன் என்ற சிறப்பு வாய்ந்த வீரம் பொருந்திய தமிழ் மன்னனை அரக்கனாகவும் பிறர் மனைவி மீது ஆசைப்பட்ட கீழோனாகவும் கம்பர் காட்டுகிறார். ஆரியரின் கைக்கூலியாக மாறிய கம்பன் இராவணனை இழித்துப் பாடியுள்ளமையைத் தமிழ் பேசும் மக்கள் வெறுக்கின்றனர். இராவணகாவியம் என்ற நூலை எழுதிய குழந்தை என்ற புலவர் இராவணனின் சிறப்புகளை மிக விரிவாக வெளிப்படுத்தி உள்ளார். ''கெட்டிக்காரனின் பொய்யும் புரட்டும் எட்டு நாளைக்கு'' என்ற பழமொழி போல் உண்மை இப்போ வெளிவந்துள்ளது.

**சுருக்கத்திற்கான குறிப்புக்கள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ தமிழர்வீரத்தையும் அவை புலப்படும் இடங்களையும் சுட்டிக் காட்டி கட்டுரை எழுதுக.

★ ஆரியர்வருகை தமிழினத்தில் ஏற்படுத்திய தாக்கம்.

★ தமிழினத்தின் கனவுகளை நனவாக்குவோம்.

புள்ளிகள் 20